வேண்டியுள்ளது. 'If, however, any inference of distortion is drawn, என்று சொல்லிவிட்டு, இப்பிரச்சினையில் அவ்வாறு செய்தியை சிதைத்து வெளியிடப்பட்டுள்ளது பற்றி நான் குறிப்பிட்டு இருந்ததும், அதற்காகத் தங்கள் குறைந்தபட்ச வருத்தத்தைக்கூடத் தெரிவிக்காததை இப்பேரவையின் இறையாண்மையைப் பொருட்படுத்தாத செயலாகவே கருத வேண்டியுள்ளது. இருப்பினும் தொலைக்காட்சி நிறுவன அலுவலர்கள் வேறுவித நிர்பந்தங்கள் காரணமாகவும் இவ்விதம் நடந்துகொள்ளும் நிலை இருப்பதும் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஊர்ஜிதமாகியுள்ளது.

எனவே, இப்பிரச்சினையில் தொலைக்காட்சி நிறுவனத்தினர் அவர்கள் அம்பு தான், எய்தவர்களை விட்டு விட்டு அம்பை நொந்து பயன் என்ன என்ற பெருந்தன்மைக்கேற்ப தொலைக்காட்சி நிறுவனத்தினர் மீது சற்று பெருந்தன்மை காட்டி, இனி வரும் நாட்களிலாவது அவையின் உரிமையைப் பாதிக்கும் அளவுக்குச் செய்திகளை வெளியிடலாகாது என்ற அறிவுரையை ஏற்று நடப்பார்கள், தங்களுடைய அஷ்யூரன்ஸை, அவர்களுடைய விளக்கத்திலேயே தெரிவித்து இருக்கிற, அந்த அஷ்யூரன்சை காப்பாற்றுவார்கள் என்று கருதி, நடந்த சம்பவத்திற்கு கடும் எச்சரிக்கையினை severe warning—ஐச் செய்து, இத்துடன் இப்பிரச்சினையை விட்டு விடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

7. கவன ஈர்ப்பு.

(அ) செங்கம் தொகுதி கல்லாத்தூர் கிராமத்தில் மலைவாழ் மக்களின் வீடுகள் தீயினால் பாதிக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் பெ. வீரபாண்டியன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் வீரபாண்டியன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கம் தொகுதி கல்லாத்தூர் கிராமத்தில் மலைவாழ் மக்களின் வீடுகள் தீயினால் பாதிக்கப்பட்டது குறித்த. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

1993 ஏப்ரல் 29] (திரு. எஸ். டி. சோமசுந்தரம்)

அறிக்கை.

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், செங்கம் வட்டம், ஜம்னா மருதூர் ஒன்றியம், கல்லாத்தூர் கிராமத்தில் 11—3—1993 அன்று பிற்பகல் 1 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் மலைவாழ் குடும்பங்கள் பாதிக்கப்பட்டன, உயிர்ச் சேதம், கால்நடை சேதம் மற்றும் பெருமதிப்புகொண்ட பொருட்கள் சேதம் ஏதும் எற்படவில்லை.

2. இந்த தீ விபத்தில் பாதிக்கப்பட்ட ஐந்து குடும்பங்களுக்கும் உடனடியாக 5 கிலோ அரிசியும், 1 லிட்டர் மண்ணெண்ணெயும், வேட்டி சேலைகளும் மற்றும் ஐந்து குடும்பங்களுக்கு தலா ரூ. 500-ம் நிவாரணத் தொகையாக உடனடியாக வழங்கப்பட்டது.

3. மேலும், தீ விபத்தில் வீடிழந்த ஐந்து மலைவாழ் குடும்பங்களுக்கும் குடிசை காப்பீட்டு திட்டத்தின் கீழ், தலா ரூ. 1,000 மான்யமாக வழங்க திருவண்ணாமலை யுனைடெட் காப்பீட்டு கழகத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வீரபாண்டியன், சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜம்னா மருதூர் ஒன்றியம், கல்லாத்தூர் கிராமத்தில் 11—3—1993 அன்று ஐந்து வீடுகள் தீயினால் பாதிக்கப்பட்டன. அன்றே 5 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண்ணெண்ணையும், வேட்டி, சேலைகளும், ரூ. 500 நிவாரணத் தொகையும் அன்றே வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களே கவலை வேண்டாம், உங்களுக்கு இளைப்பாறுதல் தர நான் இருக்கிறேன், என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் இந்த நிவாரணங்கள் உடனடியாக வழங்கப்பட்டன. மேலும், திருவண்ணாமலை யுனைடெட் காப்பீட்டுக் கழகத்தின் சார்பாக ஆயிரம் ரூபாய் மானியம் தருகிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த மலைவாழ் மக்கள் தொகுப்பு வீடுகள் பெற வாய்ப்புள்ளது. எனவே, அன்புள்ளம் கொண்ட அமைச்சர், அவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கிடைக்க பரிந்துரை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி எல்லா விதமான உதவிகளும் அப்போதே வழங்கப்பட்டன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்,

அதுமட்டுமல்ல, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக குடிசை ஒன்றுக்கு ரூ. 1,000 கொடுக்க வேண்டும் என்பதற்காக காப்பீட்டுக் கழகத்தின் மூலமாகப் பெறுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முயற்சி செய்து கொண்டிருக்கிறார் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி தீயினால் உயிர் இழந்தவர்களுக்கு எல்லாம் இதற்கு முன்னாலிருந்த அரசு ரூ. 2,000 கொடுத்து வந்தது. தீயினால் உயிர் இழந்தவர்களுக்கு 2,000 ரூபாய் கொடுப்பதை மிகக் குறைவாகக் கருதி, நம்முடைய அரசு 21—11—1992லிருந்து புரட்சித் தலைவி அவர்கள் 2,000 ரூபாயை 10,000 ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள் என்ற செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கல்லாத்தூர் கிராமம் மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கிற கிராமம். ஜவ்வாது மலை அடிவாரத்தில் உள்ளது. அங்கே 40 வீடுகள் தான் இருக்கின்றன. எனவே, அவர்களுக்கு ஒட்டு மொத்தமாக தீப்பிடிக்காத வீடுகளை கட்டிக் கொடுக்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறை இதைப்பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்கும்.

பிற்பகல் 12–10

(ஆ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் அரிச்சந்திரா ஆற்றில் ஆலத்தம்பாடி அருகில் சீமைக் காட்டாமணக்கு வளர்ந்துள்ளதால் ஆற்றில் உடைப்பு ஏற்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஜி. பழனிசாமி அவர்கள், கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை-காயிதே மில்லத் மாவட்டம், அரிச்சந்திரா ஆற்றில் ஆலத்தம்பாடி முதல் பல மைல்கள் தூரம் சீமைக் காட்டாமணக்கு வளர்ந்து, இதன் மூலமாக பல இடங்களில் ஆற்றில் உடைப்பு ஏற்பட்டுள்ள, விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதன் அவசியம் குறித்த அவசரம் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப் பட்டு உள்ளது.